இணைப்பு II

[173-ம் பக்கத்தில் 22-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினவின் விடையைக் காண்க.]

1971 செப்டம்பரில், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆனந்த வாடி மேல் சங்கம் ஒதுக்கக் காட்டில், சென்னை நிலத்தடி நீர்வள ஆய்வு இயக்குநரால் நடத்தப்பட்ட மதிப்பீட்டாய்வு பற்றிய ஓர் அறிக்கை, வேளாண்மைத் துறை இயக்குநரால் அரசுப் பண்ணைகள் கழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் கண்ட பரிவுரைகளும் முடிவுகளும் பின் வருமாறு:—

தோட்டப் பயிர்களுக்கு, பயிர் விளைவிக்கும் பருவத்தில் 18 அங்குல நீர் தேவைப்படுகிறது. ஜூலையிலிருந்து நவம்பர் வரை ஐந்து திங்களுக்கு மொத்த மழையளவு 28 அங்குலமாகும் (50 ஆண்டு சாதாரண மழை அளவிலிருந்து), பாசனக் காரியங்களுக்கு 75 சதவீத மழையளவே பயன்படுவதாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படு கிறது. எனவே, பயன்படுகின்ற மழையளவு சுமார் 21 அங்குலம் ஆகும். செங்கத்தில், 1960 முதல் 1970 வரை பெய்த மழையளவு குறித்த புள்ளி விவரத் தகவலிலிருந்து 1968, 1969 ஆகிய இரு ஆண்டு களில் மட்டுமே மழையளவு குறைந்தது எனத் தெரியவருகிறது. எனவே, பருவ மழைக் காலத்தின்போது பெய்யும் மழை மட்டும் அந்த 8,000, 9,000 ஏக்கர்களுக்கும் பாசனமளிக்கப் போதுமானது. அந்தப் பகுதியில் சுமார் 150 கிணறுகள் இறக்கி பொருத்தமான விசையேற்றங்களை அவற்றில் நிறுவுவதன் மூலம் அங்கு கிடைக்கக் கூடிய நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து பயன்படுத்தமுடியும். பருவ மழைக் காலத்தின்போது பருவ மழை பெய்யத் தாமதமானால் அல்லது பருவ மழை பொய்த்தாலும் இந்தக் கிணறுகளிலிருந்து பெறுகின்ற நிலத்தடி நீர் பாசனத்துக்குத் துணை புரியும்.

(1) குளிர் காலம் முதன்மையாகப் பயிர் விளைவிக்கும் கால மாகும். அப்பருவத்தில் (டிசம்பரிலிருந்து மார்ச் முடிய) மழை நீருக்குத் துணையாக, கிணற்று நீர், சுமார் 3,750–4,000 ஏக்கர் களுக்கு பாசனம் அளிக்க உதவும்.

(2) ஒவ்வொரு பாசனக் கிணறும் நாளொன்றுக்கு சராசரி சுமார் 50,000 காலன் நீர் வழங்கும். சுமார் 20 ஏக்கருக்குப் பாசனம் அளிக்க முடியும் (200 ஏக்கர்கள் க்யூ செக்குகள்). எனவே, மழை நீரைக் கணக்கில் சேராமல் 150 கிணறுகள் மட்டும் சுமார் 3,000 ஏக்கருக்குப் பாசனமளிக்கும்.

1972 ஆகஸ்ட் 24]

(3) பருவ மழைக் காலத்தின்போது, நில நீரில் வரை யறுத்த அளவு மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதால், கோடைக் காலத்தில் சுமார் 2,000–3,000 ஏக்கரில் பயிரிட முடியும்.

(4) 20 அடிக்கு 20 அடி பரப்பளவில் 35 அடி முதல் 40 அடி ஆழம் வரை, கடினமான பாறை காணப்படும் வரை, பாசனக் கிணறுகள் இறக்குதல், கிணற்றின் தரையிலும் அதன் பக்கவாட்டி லும் சுமார் 20 அடி ஆழத்துக்கு 2 அங்குல விட்டமுள்ள துளைகளைத் துளையிடலாம். இத்துளைகளைச் சம்மட்டியால் அடித்துத் துளை யிடலாம். இத்துளைகளை இறக்குவதன் மூலம் கிணற்றில் அதிக நீர் ஊறிப் பெருகும்.

இணைப்பு III.

[173-ம் பக்கத்தில் 23-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்களுக்கான ஆராய்ச்சிகள் திண்டிவனம், சேலம், கோயில்பட்டி, வேப்பங்குளம், பொள்ளாச்சி, கோயமுத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களில் நடத்தப்படுகின்றன. அங்கு என்னென்ன எண்ணெய்வித்துக்கள் பற்றிய ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன என்ற விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது:—

(1) பிராந்திய ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம்—நிலக் கடலை, எள், ஆமணக்கு.

(2) ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், சேலம்—ஆமணக்கு.

(3) பிராந்திய ஆராய்ச்சி நிலையம், கோயில்பட்டி—சூரியகாந்திப்பூ.

(4) தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம்—தென்னை.

(5) நிலக்கடலை ஆராய்ச்சி நிலையம், பொள்ளாச்சி—நிலக் கடலையும் மற்ற சில எண்ணெய்வித்துக்களும்.

(6) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்—நிலக் கடலையும், மற்ற எண்ணெய்வித்துக்களும்.

(இ) நல்ல குணங்களுடைய உயர் விளைச்சல் ரகங்களை தேர்ந் தெடுப்பதும், ஒட்டுச் சேர்த்துக் கண்டு பிடிப்பதும், கதிரியக்க முறை யில் இனக்கலப்பு செய்து கண்டு பிடித்தலும் போன்றவைகள், விதை களின் தரத்திற்காகவும், நிறைவான விளைச்சலுக்காகவும், ஆயிரக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS